# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109702

1. District : மாவட்டம் Nilgiris   PS: காவல்நிலையம் V&AC   Year: ஆண்டு 2022   FIR No.: மு.த.அ. எண் 05   Date: நாள் 17.05.22

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended   Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: as PC(Amendment) Act 2018   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 18.02.22   Date to : நாள் வரை till date

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் -   Time to : நேரம் வரை -

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.05.22   Time : நேரம் 08.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Wellington to Bandumai Road, near the house site of Complainant & over phone about 20 km, South East.

   Beat Number : முறைக் காவல் எண் -   (b) Address : முகவரி -

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -   District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Senthil Murugan   (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் M. Gopal

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 40   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Buisness   (g) Address : முகவரி D. No. 365/4, Samiyar Medai, Irugoor, Coimbatore (dt).

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. Nithya, Road Inspector, Highways Department, Coonoor.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 17-5-22 [signature] 17/5/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 17.05.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. Geethalakshmi
Rank: நிலை ...................No. எண் ..........
Inspector of Police, VAC
The Nilgiris.

**நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2022/AC/NI u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

17.05.2022-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது கோயமுத்தூர் மாவட்டம், இருகூர், சாமியார் மேடை, கதவு எண்.365/4, கோபால் என்பவரின் மகன் திரு.G.செந்தில்முருகன் என்பவர் அலுவலகம் வந்தார். அவரை அலுவலக நுழைவாயிலில் நிறுத்தி அவரை விசாரிக்க, அவர் புகார் கொடுக்க வந்திருப்பதாகக் கூறினார். முதலில் அவரது கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ செய்தும், பின்னர் அவரது உடல் வெப்ப நிலையையும், ஆக்ஸிஜன் அளவையும் சரிபார்க்கப்பட்டது. உடல் வெப்ப நிலையும், ஆக்ஸிஜன் அளவும் சீராக இருந்தது. அதன்பிறகு அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், குன்னூர் நெடுஞ்சாலை உட்கோட்ட அலுவலகத்தில் அனுகுசாலை (Approach) மற்றும் பொதுமக்கள் குறைகள் தொடர்பான நெடுஞ்சாலை சம்மந்தமான பணிகளுக்கு பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான

Sreejyothalakshmi
17/5/22

ஒப்புதல் பெற்று இன்று 17.05.2022-ம் தேதி காலை 09.00 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2022/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திருமதி.நித்யா, சாலை ஆய்வாளர், நெடுஞ்சாலைத்துறை உட்கோட்ட அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- நாள்:17.05.2022 அனுப்புநர் G.செந்தில்முருகன், த/பெ M.கோபால், கதவு எண்.365/4, சாமியார் மேடை, இருகூர், கோயமுத்தூர் மாவட்டம், 641103. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம். அய்யா/அம்மா, நான் கோயமுத்தூர் மாவட்டம், இருகூரில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்துக்கொண்டு, சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். நான் கடந்த 2021 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், வெலிங்டனிலிருந்து கோத்தகிரி செல்லும் சாலையில் பந்துமை என்ற இடத்தில் திரு.பாபு என்பவரிடமிருந்து 10 சென்ட் வீட்டு மனையை விலைகொடுத்து வாங்கி எனது பெயரில் குன்னூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.1626/2021-ன் படி பதிவு செய்திருந்தேன். அதன் பிறகு அந்த வீட்டு மனையில் வீடு கட்டுவதற்கான உரிமம் பெற ஜெகதளா பேரூராட்சி அலுவலகத்தில் மனு செய்துவிட்டு, வீட்டு மனையிடத்தை ஒட்டியிருந்த நெடுஞ்சாலையில் ஏற்கனவே மழைநீர் செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த கால்வாயிலிருந்து மழைநீர் எனது வீட்டுமனையிடத்திற்கு வந்து மண் அரிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக கால்வாயில் ஏற்பட்டிருந்த அடைப்பை சரிசெய்து ஏற்கனவே இருந்த கால்வாயில் மழைநீர் செல்லும்படியாக செய்து கருங்கற்களை கொண்டு எனது வீட்டு மனையின் ஓரத்தில் தடுப்புச்சுவர் கட்டியிருந்தேன். அதன்பிறகு எனது வீட்டு மனையில் காம்பவுண்டு

Vidyalakshmi
17/5/22

வேலை செய்துக்கொண்டிருந்த சமயத்தில் கடந்த 18.02.2022 ஆம் தேதியில் அங்கு வந்த பெண்மணி ஒருவர், தன்னை நெடுஞ்சாலைத் துறையின் சாலை ஆய்வாளர் (Road Inspector) என்றும், தனது பெயர் நித்யா என்றும் அறிமுகப்படுத்திவிட்டு, Approach வாங்கிவிட்டீர்களா என்று என்னிடம் கேட்டார். நான் Approach என்றால் என்ன என்று அவரிடம் கேட்டதற்கு, அவர் வாகனத்தை நிறுத்துவதற்கும், செங்கல், மணல், ஜல்லி போன்றவற்றை இறக்குவதற்கும் அனுமதி கேட்டு மனு கொடுக்கவேண்டும் என்றும், அதற்காக அரசுக்கு 10,000/- வரைவோலையாகவும், தனக்கு 10,000/- ரூபாய் லஞ்சமாகவும் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். அதன்பிறகு எனது வேலை காரணமாக நான் கோயமுத்தூருக்கு சென்றுவிட்டேன். பின்னர் 12.04.2022 ஆம் தேதி மீண்டும் சாலை ஆய்வாளர் திருமதி.நித்யா என்னை தொடர்பு கொண்டு எனது வீட்டு மனையிடத்தில் கட்டியுள்ள தடுப்புச்சுவர் முறைப்படி கட்டவில்லை என்றும் அதற்காக என் மீது முதல்வரின் தனிப்பிரிவிற்கு மனு அளித்துள்ளனர் என்றும் கூறி நேரடியாக வீட்டுமனை இடத்திற்கு வரும்படி கூறினார். அதன்படி நான் 19.04.2022 ஆம் தேதி மேற்படி சாலை ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்களை தொடர்பு கொண்டு எனது வீட்டுமனை இடத்திற்கு சென்றேன். ஆனால் நான் அங்கு செல்வதற்கு முன்பாகவே, எனது பணியாட்களை வைத்து நான் கட்டிய தடுப்புசுவரை முழுமையாக இடித்துவிட்டார். பின்னர் நான் அங்கு சென்றபோது முதல்வரின் தனிப்பிரிவு மனுமீதான நடவடிக்கை என்று கூறிவிட்டு, தொடர்ந்து வீடு கட்ட வேண்டும் என்றால், கண்டிப்பாக Approach வாங்கவேண்டும் என்று கூறி, அதற்காக கண்டிப்பாக அரசுக்கு 10,000/- ரூபாய்க்கு வரைவோலையாகவும் (Demand Draft), தனக்கு 10,000/- ரூபாய் பணமும் ஆக மொத்தம் ரூ.20,000/- தன்னிடம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அது

Geethalakshmi
17/5/22

தொடர்பாக நான் குன்னூரில் உள்ள நெடுஞ்சாலை உட்கோட்ட அலுவலகத்தில் விசாரித்தபோது, Approach தொடர்பாக அந்தந்த சாலை ஆய்வாளர்கள் சொல்லும்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கூறினார்கள். பிறகு கடந்த 05.05.2022 ஆம் தேதி நான் குன்னூர் வந்தபோது சாலை ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்களை சந்தித்து வரைவோலை சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் Approach-க்காக, நான் டைப் செய்தது போன்ற ஒரு மனு மற்றும் வரைபடம் ஒன்றை கொடுத்து அந்த மனுவில் என்னுடைய கையொப்பம் பெற்று வரைபடத்திற்காக 5,000/- ரூபாயை கொடுக்கும்படி கூறினார். அப்போது என்னிடம் பணம் எதுவும் இல்லாததால் குன்னூர் சென்று தெரிந்த நண்பரிடம் 5,000/- ரூபாய் பணத்தை தயார் செய்து, சாலை ஆய்வாளரை தொடர்பு கொண்டேன். அதற்கு அவர் வீட்டுமனை இடத்திற்கு வந்து ரூ.5,000/-ஐ கொடுக்குமாறு கூறினார். நானும் அவர் கூறியவாறு வீட்டுமனை இடத்திற்கு சென்று அவரை சந்தித்து பணம் ரூ.5,000/-ஐ கொடுத்தேன். அதன்பிறகு திருமதி.நித்யா அவர்கள் வரைபடம் மற்றும் மனு அளிப்பது தொடர்பான வேலைகளை தானே பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினார். பின்னர் மீண்டும் 11.05.2022 ஆம் தேதி திருமதி.நித்யா அவர்கள் அவரது கைப்பேசி எண். 9486414025-ல் எனது கைப்பேசி எண்.9965665011-ஐ தொடர்பு கொண்டு வரைவேலை தொடர்பாக பணம் எதுவும் கட்டவேண்டாம் என்றும், தனக்கு லஞ்சமாக 5,000/- ரூபாய் கொடுக்குமாறு கூறினார். நான் கோவையில் இருப்பதாக கூறினேன். அதற்கு அவர் அவருடைய வங்கி கணக்கில் செலுத்துமாறு கூறினார். ஆனால் கணக்கு எண் எதுவும் கொடுக்கவில்லை. மீண்டும் 14.05.2022 ஆம் தேதி கணக்கு எண் தொடர்பாக அவரிடம் கேட்டதற்கு G-Pay செய்துவிடுமாறு கூறினார். நான் என்னிடம் G-Pay இல்லை என்று கூறினேன். அதற்கு

17/5/22

அவர் வரும் திங்கள் அல்லது செவ்வாய்கிழமைகளில் நேரடியாக வந்து லஞ்ச பணம் 5,000/-ஐ கொடுக்குமாறு கண்டிப்புடன் சொன்னார். நான் வீட்டிற்கு சென்று யோசித்து பார்த்தபோது எனக்கு நெடுஞ்சாலைத்துறையிலிருந்து Apporach பெற்று தருவதற்காக என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கும் நெடுஞ்சாலைத்துறையின் பந்துமை பகுதியின் சாலை ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனது தொழில் விஷயமாக கோயமுத்தூரில் எனக்கு வேலை இருந்ததால், அந்த வேலைகளை முடித்துவிட்டு இன்று (17.05.2022) காலை நான் புகார் மனு தயார் செய்து திருமதி.நித்யா அவர்கள் லஞ்சமாக கேட்ட 5,000/- ரூபாய் எடுத்துக்கொண்டு வந்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே, என்னிடம் 5,000/- ரூபாய் லஞ்சமாக பணம் கேட்கும் நெடுஞ்சாலைத்துறையின் பந்துமை பகுதியின் சாலை ஆய்வாளர் திருமதி.நித்யா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (XXXX) 07.03.2022. Submitted: Received the above complaint on 17.05.2022 at 08.30 hrs and conducted a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.5/2022 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 17.05.2022 at 09.00 hrs. Sd (XXXX) 17.05.2022 Inspr, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

17/5/22

(B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.